

தருமபுரி மாவட்டம் அதியமான்கோட்டை அறிஞர் அண்ணா அரசு மேல்நிலை பள்ளி மாணவ – மாணவியருக்கு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் விலையில்லா பாடநூல் மற்றும் நோட்டு புத்தகங்களை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் திருமதி.சாந்தி, சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பி.வெங்கடேஸ்வரன், தருமபுரி கிழக்கு மாவட்டகழக செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி, தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் பி.பழனியப்பன், நகர்மன்ற தலைவர் லட்சுமி, நகரச் செயலாளர் நாட்டான் மாது,மாவட்ட பொருளாளர் வே. தங்கமணி, ஒன்றிய செயலாளர்கள் கிருஷ்ணன்,சரவணன்,சண்முகம்,மாநில விவசாய அணி துணை செயலாளர் சூடப்பட்டி சுப்ரமணி, தலைமைச்செயற்குழு உறுப்பினர் எம்.ஜி.சேகர், நல்லம்பள்ளி துணை சேர்மன் பெரியண்னன், ஐ.டி.விங் கௌதம்,அரசு அலுவலர்கள் மற்றும் கழகத்தினர் இருந்தனர்.

மாநில பேரிடர் தணிப்பு நிதியின் ஒதுக்கீட்டில் 50 விழுக்காட்டுக்கு மேல் செலவிட

# ஒன்றிய அரசின் அனுமதி பெற வேண்டும் என்ற நிபந்தனையைத் தளர்த்திடுவீர்!

## புதுடெல்லியில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் - அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் வலியுறுத்தல்!



புதுடெல்லி, ஜூன் 15 -

தமிழ்நாடு அரசின் சார்பில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ். எஸ். ஆர். ராமச்சந்திரன் நேற்று முன்தினம் (13.06.2023), புதுதில்லியில் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா தலைமையில் நடைபெற்ற பேரிடர் மேலாண்மை குறித்து அனைத்து மாநில பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர்கள் ஆய்வு கூட்டத்தில் கலந்து கொண்டு ஆற்றிய உரை வருமாறு :-

தென்மேற்குப் பருவ மழைக் காலத்தில் ஏற்படக் கூடிய பேரிடர்களை எதிர்கொள்ள மேற்கொள்ளப்பட வேண்டிய தயார் நிலை குறித்தும், இதர முக்கியமான பொருட்கள் குறித்தும் விவாதிக்கப்படும் இக்கூட்டத்தில் கலந்து கொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

சமீப காலங்களில், பேரிடர்கள் அடிக்கடி ஏற்படுவதும், அவற்றின் தாக்கம் மிகக் கூடுதலாக இருப்பதும், பேரிடர் நிர்வாக அமைப்புகள், எக்காலத்திலும் தயார்நிலையில் இருக்க வேண்டிய கட்டாயத்தில் இருப்பதும், ஒரு புதிய இயல்பு நிலையாக உள்ளது.

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், தென்மேற்குப் பருவ மழைக்காலத்தில், வெள்ளம், கன மழை அதனால் பயிர் சேதங்கள், ஆறுகள் / கால்வாய் உடைப்புகள், இடி மின்னலுடன் ஏற்படும் கனமழை, உயிர் சேதங்கள், நிலச்சரிவுகள் ஏற்பட்டன. இக்காலத்தில் மழைப் பற்றாக்குறை ஏற்பட்டு அதனால் குடிநீர் விநியோகம் பாதிப்பு மற்றும் வறட்சியால் பயிர் சேதங்கள் ஏற்பட்டதும் உண்டு.

நான் விவரித்த பாதிப்புகளிலிருந்து மக்களை எவ்வாறு பாதுகாப்பது, இச்சூழ்நிலைகளை எவ்வாறு கையாள்வது என்பது குறித்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையில் இயங்கும் தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையமும், அரசு தலைமைச் செயலாளரின் தலைமையில் இயங்கும் மாநில செயலாக்க குழுவும், மாநில நிவாரண ஆணையரின் தலைமையில் இயங்கும் வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையும், மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில் இயங்கும் மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையமும் சிறப்பான முறையில் தயார் நிலையில் உள்ளன. பேரிடர்களை திறம்பட எதிர்கொள்ள உள்துறை அமைச்சகத்தோடும் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தோடும் தொடர்பு கொண்டு அனைத்து வழிகாட்டுதல்களையும் பின்பற்றி வருகிறோம். தென்மேற்கு பருவமழைக் காலத்தில் ஆயத்த நிலை குறித்து கேட்கப்பட்ட 14 விபரங்கள் தமிழ்நாடு அரசால் அளிக்கப்பட்டுள்ளது. இந்த நல்வாய்ப்பினை பயன்படுத்தி பின்வரும் கோரிக்கைகளை இம்மாமன்றத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

### தொழில் நுட்ப வழிகாட்டுதல்கள்!

15வது நிதிக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட தேசிய பேரிடர் தணிப்பு நிதி, மாநில பேரிடர் தணிப்பு நிதி பயன்பாட்டுக்கான தொழில்நுட்ப வழிகாட்டுதல்கள் விரைவில் வழங்கப்பட வேண்டும்.

பேரிடர் மேலாண்மையில் முழுப்பொறுப்பும் மாநில அரசை சார்ந்ததாக இருக்கும் பொழுது திட்ட செயல்பாட்டு வழிமுறைகள், மாநிலத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு ஏதுவாக இருக்க வேண்டுமே அன்றி இதனை முடக்குவதாக இருக்கக் கூடாது.

பேரிடர் தணிப்புப் பணிகளுக்கு மாநில பேரிடர் தணிப்பு நிதியை முழுவதுமாக பயன்படுத்திய பின்னர் தான் மாநிலத்தின் பேரிடர் தணிப்புப் பணிகளுக்கு தேவையான தொகை தேசிய பேரிடர் தணிப்பு நிதியிலிருந்து கிடைக்கப்பெறும் என்ற நிலை மாற்றப்பட்டு மாநில அரசு, திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கிய நிலையிலேயே மத்திய ஒதுக்கீடு வழங்குவது பரிசீலிக்கப்பட்டு திட்ட ஒப்புதலும் நிதி ஒதுக்கீடும் வழங்கப்பட வேண்டும்.

சிறப்புத் திட்டங்களான வறட்சி தணிப்பு திட்டம், இடி மின்னல் பாதிப்பு தணிப்புத் திட்டம், தீயணைப்புத் துறை நவீனப்படுத்தும் திட்டம் ஆகியவற்றுக்கான வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டு, திட்டப்பணிகள் விரைவில் மேற்கொள்ளும் வகையில் திட்ட முன்மொழிவுகள் பெறப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

மாநில பேரிடர் நிவாரண நிதித் தொகுப்பில் விதிக்கப்பட்டுள்ள வரன் முறைகள்

மாநில பேரிடர் நிவாரண நிதி மற்றும் மாநில பேரிடர் தணிப்பு நிதியின் நிதியளிப்பு இனங்கள் ஒன்றுக்கொன்று மாறக்கூடியவை அல்ல என்றாலும், அந்தந்த நிதிகளின் துணைச் சாளரங்களுக்குள் நெகிழ்வுத்தன்மை மற்றும் மறு ஒதுக்கீடு செய்யப்படலாம். அத்தகைய மறு ஒதுக்கீடு அந்த துணை சாளரத்தின் ஒதுக்கப்பட்ட மொத்த தொகையில் 10 சதவீதத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை தளர்த்தப்பட வேண்டும்.

ஒரு நிதி ஆண்டில் குறிப்பிட்ட ஒரு பேரிடருக்கு மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து 50 விழுக்காடு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். இருப்பினும், மாநில அரசின் எழுத்துப்பூர்வமான கோரிக்கையின் அடிப்படையில் தேசிய செயற்குழுவின் துணைக் குழுவின் பரிந்துரையின் பேரில் இந்த நிபந்தனையை உள்துறை அமைச்சகம் தளர்த்தலாம். தமிழ்நாடு, பல்வேறு பேரிடர்களின் காரணமாக பெரிதும் பாதிப்பிற்குள்ளாவதால் மாநில பேரிடர் தணிப்பு நிதியிலிருந்து ஒரு நிதியாண்டில் ஒரு குறிப்பிட்ட பேரிடருக்கு மாநில பேரிடர் தணிப்பு நிதியின் மொத்த ஒதுக்கீட்டில் 50 விழுக்காட்டுக்கு மேல் செலவிட இந்திய அரசின் அனுமதி பெற வேண்டும் என்ற நிபந்தனையை தளர்த்திட வேண்டும்.

மாநில பேரிடர் நிவாரண நிதியின் நான்கு பிரிவுகளின் ஒரு பிரிவான சீரமைப்பிற்காக குறைந்த அளவே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில், சீரமைப்பு பணிகளுக்காக நிதி தேவைப்படும் நேர்வுகளில் மாநில பேரிடர் நிவாரண நிதியின் இதர பிரிவுகளான மீட்பு மற்றும் நிவாரணம், ஆயத்த நிலை (ம) திறன் மேம்பாடு ஆகியவற்றிலிருந்து சீரமைப்பு பணிகளுக்காக நிதியை பயன்படுத்திக் கொள்ள வழிவகை செய்ய வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் குறிப்பிட்டார்.

# குன்னூரில் பலத்த மழை!

குன்னூர், ஜூன் 15 -

தென்மேற்கு பருவமழை தொடங்கியதை அடுத்து நீலகிரியில் மழை பெய்து வருகிறது. கூடலூர் மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வந்தது. நேற்று முன்தினம் பலத்த காற்றுடன் கனமழை பெய்தது. இந்த மழையால் பல இடங்களிலும் சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. தாழ்வான இடங்களில் தண்ணீர் தேங்கி நின்றதால் மக்கள் மிகவும் அவதிப்பட்டனர்.

பலத்த சூறாவளி காற்றுடன் பெய்த மழைக்கு, தேவர்சோலை பேரூராட்சி, புழம்பட்டி பகுதியைச் சேர்ந்த பாத்திமா என்பவரது வீட்டின் மீது மரக்கிளை முறிந்து விழுந்தது. இதில் அவரது வீடு முழுவதும் சேதமடைந்தது. அதிர்ஷ்டவசமாக வீட்டில் இருந்தவர்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை. இதேபோல் குன்னூர் கோத்தகிரி சாலை டாஸ்மாக் குடோன் அருகே மரம் முறிந்து அங்கு நிறுத்தப்பட்ட லாரி மீது விழுந்தது. இதில், லாரியின் முன்பகுதி சேதம் அடைந்தது. மேலும் வாகனங்கள் செல்ல முடியாமல் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

## புதுக்கோட்டை மாவட்டத்தில்

# திட்டக்குழு உறுப்பினர்கள் தேர்தலுக்கு போட்டியிடும் வேட்பாளர்கள்!

## மாவட்டச் செயலாளர்கள் - அமைச்சர் எஸ்.ரகுபதி - கே.கே.செல்லப்பாண்டியன் அறிவிப்பு!

புதுக்கோட்டை மாவட்ட திட்டக்குழு உறுப்பினர்கள் தேர்வு செய்வதற்காக புதுக்கோட்டை மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்களிடமிருந்து 10 பேரை மாவட்ட திட்டக்குழு உறுப்பினர்களாக தேர்ந்தெடுப்பதற்கு கழகத்தின் சார்பில் கீழ்க்கண்ட 10 பேர் கழக தலைவர் தளபதியின் ஆசியோடு வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளார்கள்.

1. சாந்தி தங்கச்சிங்கம்
2. ராஜேஸ்வரி செந்தில்குமார் 3.த.செல்வம்
4.நா.ஸ்டாலின்
5. மு.க.இராமகிருஷ்ணன்
6. கலைவாணி சுப்பிரமணியன்
7. உஷா செல்வம்
8. சரிதா மேகராஜன்
9. பாக்கியலெட்சுமி கார்த்திகேயன்
10.கே.இராமநாதன்

புதுக்கோட்டை நகர , பேரூராட்சி வார்டு உறுப்பினர்களிடமிருந்து 2 பேரை மாவட்ட திட்டக்குழு உறுப்பினர்களாக தேர்ந்தெடுப்பதற்கு கழகத்தின் சார்பில் கழக தலைவர் தளபதியின் ஆசியோடு கீழ்க்கண்ட 2 பேர் வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளார்கள்.

1. செந்தாமரை பாலு
2.புவனேஸ்வரி காளிதாஸ்

மேற்கண்ட வேட்பாளர்களை
வெற்றி பெற செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**அமைச்சர் எஸ்.ரகுபதி**
செயலாளர்
புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க.

**கே.கே.செல்லப்பாண்டியன்**
செயலாளர்
புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி,மு.க.






பல்லாவரம் – தாம்பரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தாம்பரம் மாநகராட்சி பகுதிகளில் மாநில பேரிடர் வெள்ளத் தடுப்பு 2023–24 திட்டத்தின் கீழ் 13 இடங்களில் ரூபாய் 37.59 கோடி மதிப்பீட்டில் 12.461 கிலோமீட்டர் நீளத்திற்கு அகலமான மூடி உடன் கூடிய ஆர்.சி.சி மழை நீர் வடிகால் கால்வாய் அமைக்கும் பணிகளை கழகப் பொருளாளரும் திமுக நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு அவர்கள் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சரும் காஞ்சிபுரம் மாவட்ட கழகச் செயலாளருமான தா.மோ.அன்பரசன் ஆகியோர் துவக்கி வைத்தார்கள் அப்பொழுது மாவட்ட ஆட்சியர் ஏ.ஆர்.ராகுல் நாத், பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி, தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ். ஆர். ராஜா , தாம்பரம் மாநகராட்சி ஆணையர் அழகு மீனா, தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், மண்டலத் தலைவர் இ. ஜோசப் அண்ணாதுரை, பகுதி கழகச் செயலாளர் செயலாளர் ஏ. கே. கருணாகரன், மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி அதிகாரிகள், வட்டக் கழகச் செயலாளர் நல்வாழ்வு சங்க நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.

ஒன்றிய அரசு வேலைவாய்ப்பு போட்டித் தேர்வுகளுக்கான

# கட்டணமில்லா ஒருங்கிணைந்த பயிற்சி வகுப்பு - பாடத்திட்டம்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜூன்15 -

சென்னை கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நேற்று முன்தினம் (13.06.2023) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, மற்றும் சிறப்புத் திட்டச் செயலாக்க துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஒன்றிய அரசு வேலைவாய்ப்பு போட்டித் தேர்வுகளுக்கான கட்டணமில்லா ஒருங்கிணைந்த பயிற்சி வகுப்பு மற்றும் பாடத்திட்டத்தினை தொடங்கி வைத்து மாணவ - மாணவியர்களுக்கு பயிற்சிக் கையேட்டினை வழங்கினார்.

இந்த விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசும் போது கூறியதாவது:

நான் முதல்வன் திட்டத்தின் கீழ் போட்டி தேர்வுப் பிரிவானது 07.03.2023 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, தமிழ்நாட்டு இளைஞர்கள் ஒன்றிய அரசு வேலைவாய்ப்புக்கான போட்டித் தேர்வுகளை எளிதாக அணுகும் வண்ணம் இரயில்வே/ எஸ்.எஸ்.சி/ வங்கித் தேர்வுகளுக்கான கட்டணமில்லா ஒருங்கிணைந்த பயிற்சி வகுப்புகளை தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் 100 நாட்களுக்கு வழங்கத் திட்டமிடப்பட்டது.

மாவட்டந்தோறும் 150 மாணவர்களுக்கு கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள், வழிகாட்டுதல் மற்றும் பாடப் புத்தகங்கள் கொடுக்கத் திட்டமிடப்பட்டு ஆன்லைன் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டது. பயிற்சி வகுப்புகளுக்காக, நான் முதல்வன் இணையதளத்தில் மொத்தம் 26,000 விண்ணப்பதாரர்கள் விருப்பம் தெரிவித்திருந்தார்கள். அதில் 6900 மாணவர்கள் அவர்களது பத்தாம் வகுப்பு, பன்னிரண்டாம் வகுப்பு மற்றும் இளநிலை பட்டப்படிப்பின் மதிப்பெண்கள் அடிப்படையிலும் தமிழ்நாட்டு அரசின் கல்விக்கான இட ஒதுக்கீட்டின் வாயிலாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இதற்கான பயிற்சி வகுப்புகள் மற்ற மாவட்டங்களில் 29.05.2023 அன்று முதல் செயல்பாட்டிற்கு வந்த நிலையில், சென்னை கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் பயிற்சி வகுப்பு இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

மேலும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் சார்பில் இரயில்வே/ எஸ்.சி/ வங்கித் தேர்வுகளுக்கான ஒருங்கிணைந்த பாடத்திட்டத்தை தொடங்கிவைத்து மாணவ - மாணவியர்களுக்கு பயிற்சி கையேட்டினை அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்த விழாவில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ஜெ.இன்னசென்ட் திவ்யா, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையர் கோ.வீரராகவ ராவ் மற்றும் நான் முதல்வன் போட்டி தேர்வுப் பிரிவின் சிறப்புத்திட்ட இயக்குநர் சி.சுதாகரன் மற்றும் முதன்மை நிர்வாக அலுவலர் ஜெயப்பிரகாசம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# திருவாரூர் மாவட்டக் கழக செயல் வீரர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. அறிக்கை!



திருவாரூர் மாவட்ட செயல்வீரர்கள் கூட்டம் இன்று (15.06.2023 - வியாழன்) காலை 10.00 மணிக்கு மாவட்டக் கழக அவைத்தலைவர் க.தன்ராஜ் தலைமையில் திருவாரூர் முத்துவேலர் அஞ்சுகம் அரங்கில் நடைபெற இருக்கிறது.

அதுசமயம் மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், தலைமைச் செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்:** ஜூன் 20 மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் "கலைஞர் கோட்டம் " திறப்புவிழா
கழக ஆக்கப் பணிகள்.

**பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ.**
செயலாளர்
திருவாரூர் மாவட்ட தி.மு.க.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## எம்.ஆர். கண்ணன்

## ஜூன் 15 (1976)



தந்தை பெரியாரின் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, திராவிடர் கழகத்தில் உறுப்பினராகி, கழகம் தோன்றியபோது வாழ்நாள் உறுப்பினராக பதிவு செய்து கொண்டு கழகத்தின்மீது நீங்காப் பற்றும்,தணியாத ஆர்வமும் கொண்டு கொள்கை உறுதியோடு கழகப் பணி ஆற்றி வந்தார்.

1959ல் முதன்முதலாக கழகத்தின் சார்பில் சென்னை மாநகராட்சியின் அப்போதைய 27வது வட்ட மன்ற உறுப்பினராக போட்டியிட்டு வெற்றி பெற்று பணியாற்றியதோடு; 1967, 1971 ஆகிய இரண்டு முறை சென்னை, 'பேசின்பிரிட்ஜ்' சட்டமன்றத் தொகுதி கழக உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

"நெஞ்சுரமிக்க தளபதி ஒருவரை சென்னை மாவட்டக் கழகம் இழந்துவிட்டது. அந்தோ! புயலையும் புன்னகையுடன் எதிர்த்து நிற்கும் ஆருயிர் உடன்பிறப்பையல்லவா நான் இழந்துவிட்டேன்" என 'என் நெஞ்சில் நீயிருப்பாய், கண்ணா!' என்ற கடிதத்தில் தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**